# சீவகாருணியம்

மறைமலையடிகள்

விலை 15 புதுக்காசுகள்

# சீவகாருணியம்

"கொல்லாமற் கொன்றதைத் தின்னுமற் குத்திரங்
கோள்களவு, கல்லாமற் கைதவரோ டிணங்காமல்
கனவிலும்பொய், சொல்லாமற் சொற்களைக் கேளா
மற் றேரைகயர் மாயையிலே, செல்லாமற் செல்வந்
தருவாய் சிதம்பர தேசிகனே"

"சீவகாருணியம்" என்பது இரண்டு சொற்களால் ஆகிய ஒரு சொற்றொடராகும். இதனைப் பிரித்தால் ஜீவ என்றுங் காருணியம் என்றும் இரண்டு சொற்கள் பெறப்படும். சீவர்கள் என்பன யாவையோ வென்றால், தொட்டால் அறியும் ஓர் அறிவு மட்டும் உடைய புல் மரஞ் செடி கொடி முதலியனவுந், தொட்டால் அறிவதொடு நாவினாற் சுவைக்குஞ் சுவையுணர்வும் உடைய ஈரறிவு உயிர்களான நத்தை சங்கு கிளிஞ்சில் முதலியனவுந், தொட்டறிந்து நாவாற் சுவைத்தலொடு மூக்கால் நாற்றத்தையுணரும் மூன்றறிவுயிர்களான கரையான் எறும்பு ஈசல் முதலியனவுந், தொடுதலுஞ் சுவைத்தலும் முகருதலும் என்னும் உணர்வுகளொடு கண்ணாற் காணும் அறிவுமுடைய நான்கறி வுயிர்களான நண்டுந் தும்பியும் வண்டுந் தேனீயும் முதலியனவுந், தொடுதல் சுவைத்தல் முகருதல் காணல் என்னும் நான்கு உணர்வுகளொடு காதாற் கேட்டுணரும் அறிவும் உடைய ஐந்தறி வுயிர்களான விலங்குகள் பறவைகள் காட்டு மிராண்டிகள் முதலியனவுந், தொடுதல் சுவைத்தல் முகருதல் காண்டல் கேட்டல் என்னும் ஐந்தறிவுகளொடு நல்லதிது தீயதிது என்று

பகுத்துணரும் மனவுணர்வும் உடைய ஆறறிவுயிர்களான மக்களும் என்று சொல்லப்பட்ட இந்த ஆறு வகையில் அடங்கிய உயிர்கள் அத்தனையுஞ் சீவர்களென்றே சொல்லப்படும்.

இனிக், காருணியம் என்பது அருள் அல்லது இரக்கம் என்னும் பொருளைத் தருவதாகும். இவ் விரக்கம் என்னும் உயர்ந்த குணமானது இது நல்லது இது தீயது என்று பகுத்துக் காணும் உணர்ச்சி வாய்ந்த மக்களிடத்து மட்டுங் காணப்படுகின்றதேயல்லாமல், மக்கள் அல்லாத மற்ற ஐந்து வகைப்பட்ட உயிர்களிடத்துங் காணப்படவில்லை. இவ் வைந்து வகை உயிர்களிற் சில பசியெடுத்த காலங்களிலெல்லாந் தம்மினுங் கீழ்ப்பட்ட உயிர்களைச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்று அவற்றின் உடம்பைச் சிதைத்துத் தின்னுகின்றன. ஆதலால், இரக்க குணம் மக்கள் அல்லாத மற்றைய உயிர்களிடத்தில் இல்லை என்பது இனிது விளங்குகின்றதன்றோ?

இனி, இவ் விரக்க குணமென்பது எந்த உயிர்களிடத்து இல்லையோ அந்த உயிர்கள் எல்லாங் கொடிய வன்னெஞ்சமுங் கொலைத் தொழிலும் உடையனவாய் இருக்கின்றன. இரக்க குணம் எந்த உயிர்களிடத்து இருக்கின்றதோ அந்த உயிர்கள் இனிய மென்னெஞ்சமும் எல்லாரும் விரும்பத்தக்க இனிய செய்கையும் உடையனவாய் இருக்கின்றன. இந்தக் காரணத்தினாலேதான் இரக்க குணம் இல்லா உயிர்களின் தன்மை விலங்கின்றன்மை என்றும் இரக்க குணம் உள்ள உயிர்களின் தன்மை தெய்வத் தன்மை என்றும் வழங்கி வருகின்றோம். இனி மக்களின் றன்மையோ இவ்விரண்டிற்கும் நடுவில் நிற்

கும் இயல்பு வாய்ந்ததாய் இருக்கின்றது. பசிநோய் தீரும்பொருட்டுக் கொடிய வன்னெஞ்சம் உடையராய்ப் பிற உயிர்களிடத்துச் சிறிதும் இரக்கம் இன்றி அவற்றைக் கொலை செய்து அவற்றின் ஊனைத் தின்பவர்கள் விலங்கின் றன்மையை அடைகின்றார்கள். தமக்குக் கடும்பசி உண்டான காலத்துந் தம்முயிர்போல் மன்னுயிரை எண்ணி அவற்றிற்குச் சிறிதுந் தீங்கு செய்யாமல். தமக்குக் கிடைத்த காய் கனி கீரை கிழங்கு பயறு முதலியவற்றை உணவாகக் கொண்டு எல்லா வுயிர்களிடத்தும் இரக்கம் வைத்து ஒழுகுபவர்கள் தெய்வத் தன்மையுடையராகின்றார்கள். எல்லா உயிர்களிடத்தும் இரக்கமுடையவரான ஆண்டவனது பேரின்பத்தை நாம் நுகர வேண்டுமாயின் அவர்போல் அளவிறந்த இரக்க குணமாகிய தெய்வத் தன்மையை அடைதல் வேண்டும். எவர்கள் மென்மையான இனிய இரக்க குணம் உடையவராகின்றார்களோ அவர்களுக்கே எல்லாம் வல்ல கடவுள் அருள் புரிவான். இது,

> "கல்லாலெறிந்துங் கைவில்லால் அடித்துங் கனி
> மதுரச், சொல்லாற்றுதித்தும்நற் பச்சிலை தூவி
> யுந்தொண்டரினம், எல்லாம் பிழைத்தன அன்
> பற்றநான் இனி ஏதுசெய்வேன், கொல்லா விர
> தியர் நேர்நின்ற முக்கட் குருமணியே"

என்று அருட்பெருஞ் செல்வரான தாயுமான அடிகள் கூறியவாற்றானுந், திருவருட் செல்வரான இராமலிங்க அடிகள்,

> "வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்
> மனங்கலந்து மதிகலந்து வயங்காநின்ற
> என்புகலந் தூன்கலந்து புலன்களோடும்
> இந்திரிய மவைகலந்துள் இயங்குகின்ற

**அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்**
**ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி**
**இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி**
**எழுங்கருணைப் பெருக்காறே இன்பத்தேவே"**

என்னும் அருட்பாவினுற் கொலைக்குணமில்லாதவர்களின் உடம்பு உயிரெல்லாம் இறைவன் கலந்து நின்று பொலிகுவான் என்று கூறியவாற்றானும் நன்கு விளங்கும்.

இன்னும் பேரிரக்க குணமான கொல்லாமை உடையவர்களுக்கு எல்லா நற்குணங்களுந் தாமே வந்து பொருந்து மெனவும், அவ் விரக்க குணம் இல்லாதவர்களுக்கு எல்லாத் தீய குணங்களும் மேன்மேற் கிளைத்தெழுந்து அவர்களைத் தனி விலங்குகளாக்கி விடுமெனவும் இனிது விளக்கும் பொருட்டே நம் தாயுமான அடிகள்,

**"கொல்லாமைஎத்தனை குணக்கேட்டை நீக்கும்"**

என்றும்,

**"கொல்லாவிரதம்ஒன்று கொண்டவரே நல்லோர் மற்,**
**றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"**

என்றும் அருளிச் செய்தனர்களாயிற் கொல்லா விரதமாகிய தெய்வத்தன்மையின் மேன்மையையுங் கொலைக்குணமாகிய விலங்கின் றன்மையின் தாழ்மையையும் யாம்விரித்துச் சொல்லுதலும் வேண்டுமோ?

இங்ஙனமே இரக்கமற்ற கொடிய கொலைத் தொழிலையும் அதனுல் வரும் புலால் உண்ணுதலையும் நாம் பழகிவருவோமாயின் இரக்கமற்ற கொடிய விலங்குகளாகிய புலி கரடி சிங்கம் முதலிய விலங்குகளின் இயல்பை நாம் அடைவதொடு நம்மைச் சேர்ந்தவர்களையும் அக்கொடிய தன்மையை அடை

யும்படி செய்துவிடுவோம். ஒரு குடும்பத்தில் ஒருவர் புலால் தின்று பழகுவராயின் அவரொடு சேர்ந்த அக் குடும்பத்தாரும் நண்பர்களும் அவரைப்போற் புலால் தின்று கெட்டுப்போவர். இது பற்றியே,

"கொலையிலான் உதவு மன்னங் கூறிற்பே ரமுத
மாகும், கொலையுளான் உதவும் அன்னங் கூறிற்
பேர் விடமதாகும், புலையர்தம் மனையில் உண்
போன் புலையனு மாறுபோலக், கொலைஞர்த
மனையில் உண்போன் கொலைஞனே ஆவனன்றே"

என்னும் திருமொழியும் எழுந்தது.

இனி, அன்புருவாயும் அருளுருவாயும் இரக்கவுருவாயும் விளங்காநின்ற நம் ஆண்டவன் தன்போல் அன்பும் அருளும் இரக்கமும் நிரம்பி யிருக்கின்ற உயிர்களிடத்து மட்டுமே குடிகொண்டு தோன்றுவான். இரக்க மில்லாமற் பல உயிர்களையுங் கொன்று தின்று வாழும் மக்களிடத்து அன்பு வைத்து அருள்புரியான் என்பதும் வெளிப்படையாகும்.

நாம் நம்தாயின் கருப்பையிலே தங்கியிருந்த காலத்தும், நிலத்திற்பிறந்து வளர்ந்துவருகின்ற காலத்தும் நமக்கு வேண்டுவனவற்றை நாம் கேளாமலே தானே அறிந்து கொடுக்கும் ஆற்றலும், நம்மாற் சிறிதுஞ் செய்யலாகாத உடம்பின் அமைப்புகளை யெல்லாம் ஒவ்வொரு நொடியுந் தவறுமல் இழைத்துவரும் ஐயன் அருள்வலிமையும் இங்கு என்னென்று எழுதுவேம்!

இத்தனை இரக்கமுமுள்ள எல்லாம்வல்ல கடவுளாகிய முதற்பெருந் தந்தைக்கு அருமைப் புதல்வர்களாம் உரிமை வாய்ந்த எல்லா உயிர்களுந் தம்முள்

அன்பும் இரக்கமும் பூண்டு நடத்தல் இன்றியமை யாத கடமையாகும். இதனை நினையாமல் மக்களான நாம் நம்மினுந் தாழ்ந்த உயிர்களைக் கொலைசெய்து அவற்றின் ஊனைத் தின்றால் அதனைக் கண்டு நம் அப்பன் சினங்கொண்டு நம்மைக் கொடுந் துன்பத் துக்கு உள்ளாக்குவா னென்பது திண்ணம். இது குறித்தே,

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடி காரர் வரிகயிற்றாற் கட்டிச்
செல்லிடு நீரென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே" என்றும்,
"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே"

என்றுந் திருமூல நாயனார் திருவாய்மலர்ந்தருளினார், நாம் இப் பிறப்பிற் புலால் தின்றால் மறு பிறப்பிற் றானே ஏதோ கடவுள் ஒறுக்கப்போகின்றார் என்று எண்ணி விடாதீர்கள்! புலால் உண்பதனால் இந்தப் பிறவியிலேயே கோமாரி, அம்மை, கக்கற்கழிச்சல், வயிற்றுவலி முதலிய நோய்களையும், வறுமை, மனக் கவலை, சண்டை, கிறுக்குப் பிடித்தல் முதலான பொல்லாங்குகளையும் ஏவி நம்மை நம் ஆண்டவன் துன்பப்படுத்தி ஒறுப்பான் என்பதற்கு நம் ஆசிரிய ரான சுந்தரமூர்த்தி நாயனாரருளிச் செய்த,

"குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்
சூழ்ந்த களவெலாம், செற்றொருவரைச் செய்த
தீமைகள் இம்மையேவருந் திண்ணமே, மற்
றொருவரைப் பற்றி லேன்மற வாதொழி மட
நெஞ்சமே, புற்றரவுடைப் பெற்றமேறி புறம்
பயந்தொழப் போதுமே"

என்னுந் திருமொழியே சான்ருகும். இன்னுங் கொல்லாதவர்களைக் கொல்லச் சொல்லியும், புலால் தின்ருதவர்களைத் தின்னச் சொல்லியுங் கட்டாயப் படுத்தினவர்களெல்லாரும் நிரயத்திற் சேர்வார்களென்று **காசிகாண்டம் கூறுகின்றது.**

**"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்**
**நின், தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"**

என்றபடி எல்லா வுயிர்களையும் நம்முயிர்போல் எண்ணி இரக்கத்தொடு நாம் நடக்க வேண்டும். நம் உடம்பில் ஒரு முள்ளுக் குத்தினுலும் ஒரு கத்தி வெட்டுப் பட்டாலும் நாம் எவ்வளவு துன்பத்தை அடைகின்ருேம்! நம்மை ஒருவர் வெட்டவந்தால் தப்பிப்பிழைக்க ஓடுகின்ருே மல்லேமோ? இங்ஙனமே ஆடு மாடு கோழி கொக்கு பன்றி மீன் முதலான உயிர்களெல்லாந் தம்மை ஒருவர் கொல்ல வரும் போது எவ்வளவு நடுக்கத்தோடு அஞ்சி ஓடுகின்றன ஐயோ! அவற்றிற் பல எவ்வளவு துன்பத்தொடு வாய்விட்டுக் கதறி அழுகின்றன! அவற்றின் கழுத்தை இரக்கமில்லாக் கொடியோர் கத்திகொண் டறுக்கையில் அவைகள் என்ன துடிதுடிக்கின்றன! ஆ! ஆ! அவற்றின் துன்பத்தை நினைத்துப் பார்த் தால் நெஞ்சம் நீராய் உருகவில்லையா? ஐயோ. பாவம்! வாயற்ற அவ் வேழை உயிர்களைக் கொல்ல வுங் கொன்றதைத் தின்னவும் பெண்பாலார் அஞ்சிக் கைவிட்டால் ஆடவர்கள் புலால் தின்பது ஒழியு மன்ருே? நெடுநாளாக உயிர்களைக்கொன்று தின்று வந்த பாவச்செய்கையை நினைந்து இரக்கமுற்று நம் இறைவனுகிய தந்தையிடஞ் சொல்லி மன்னிப்புக் கேட்டு எந்த உயிர்க்குந் தீங்கு செய்யாமல் இரக்கம் பூண்டு ஒழுகுதலே மக்களுடைய கடமையாம்.

"கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க,
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பரா
பரமே"

என்னுந் தாயுமான அடிகளின் திருமொழிப்படி கொல்லா அறத்தின் மேன்மையை எங்கும் பரவச் செய்து அன்பும் இரக்கமும் உடையவர்களாய்த் தெய்வத்தன்மையை நாம் அடைந்து கடவுளுடைய திருவருளைப் பெறுதல் வேண்டும்.

# மறைமலையடிகள் நூல்கள்

| | ரூ. | பு. கா. |
|---|---|---|
| அம்பிகாபதி அமராவதி | 4 | 00 |
| அறிவுரைக் கொத்து | 3 | 00 |
| ஷை உயரிய பதிப்பு | 3 | 50 |
| மறைமலையடிகள் கடிதங்கள் | 1 | 00 |

## அடிகளாரின் சிறு நூல்கள்

| | | |
|---|---|---|
| தமிழின் தனிச் சிறப்பு | 0 | 37 |
| கடவுள் நிலை | 0 | 15 |
| சைவசமயப் பாதுகாப்பு | 0 | 15 |
| திருக்கோயில் வழிபாடு | 0 | 15 |
| சிறுதேவதைகட்கு உயிர்ப்பலியிடலாமா? | 0 | 15 |
| சீவகாருணியம் | 0 | 15 |
| கடவுளுக்கு அருளுருவம் உண்டு | 0 | 15 |
| கல்வியே அழியாச் செல்வம் | 0 | 15 |
| கல்வியுங் கைத்தொழிலும் | 0 | 15 |
| பகுத்துணர்வும் மாதரும் | 0 | 25 |
| தமிழ்த்தாய் | 0 | 15 |
| தமிழிற் பிறமொழிக் கலப்பு | 0 | 25 |
| தனித்தமிழ் மாட்சி | 0 | 25 |
| அறிவுநூற் கல்வி | 0 | 15 |
| தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும் | 0 | 60 |
| உடன்பிறந்தார் ஒற்றுமை | 0 | 15 |
| கூட்டு வாணிகம் | 0 | 15 |
| பெண்மக்கள் கடமை | 0 | 15 |
| பெற்றோர் கடமை | 0 | 25 |

**பாரி நிலையம்**
59. பிராட்வே · சென்னை 1.

Wrapper Printed at Shanti Press, Madras-1